**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 13.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 1773/E/2017**

திரு த.இராமலிங்கம் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
T.வாடிப்பட்டி,
மதுரை மாவட்டம் - 625 218. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 24.10.2016 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 26.11.2016 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 03.02.2017 |

******

**ஆணை**

இன்று (13.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு த.இராமலிங்கம் ஆஜராகவில்லை. மேல்முறையீட்டாளருக்கு ஆணையத்திலிருந்து அனுப்பப்பட்ட விசாரணை அறிவிப்புக் கடிதமானது 26.08.2019 சார்வு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7-ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தான் ஆஜராகாதது குறித்து ஆணையத்திற்கு எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை. இதனை ஆணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல்

அலுவலர், திருமதி மு.கோமதி, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், T.வாடிப்பட்டி, மதுரை மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 24.10.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், ஆதனூர் கிராமத்தில் புல எண்.30/2, 44 மற்றும் 53/1-ல் உள்ள நிலத்திற்குரிய பட்டாவில் த.இராமலிங்கம், தங்கம் ஆசாரி மற்றும் உமையனன் ஆசாரி ஆகியோர்களின் பெயர்கள் இருக்கின்றது என்றும், **Sub Court Madurai Degree in O.S.No.237/69 dated 17.07.1975-ன்** படி தங்கம் ஆசாரி மற்றும் உமையனன் ஆசாரி ஆகியோர்களுக்கு எந்தவிதமான அடிப்படை உரிமையும் இல்லையென்றும், இந்நிலையில் எதன் அடிப்படையில் தங்கம் ஆசாரி மற்றும் உமையனன் ஆசாரி பெயர்கள் சேர்க்கப்பட்டன என்பதற்குரிய தகவல்கள், ஆவணக்கோப்பு நகல்கள் மற்றும் பெயர் சேர்த்திருப்பது தவறானதா, சரியானதா என்ற விபரங்களைத் தகவலாக் கோரி பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 22.11.2016 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 26.11.2016 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், வாடிப்பட்டி, மதுரை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 21.12.2016 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், முழுமையான தகவலை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 03.02.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்குத் தங்களது அலுவலக ஆவணங்களின் பராமரிப்பிலுள்ள தகவல் 22.11.2016 மற்றும் 21.12.2016 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

5. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்குப் பொது அதிகார அமைப்பினரின் ஆவணங்களின் அடிப்படையில் வழங்கக்கூடிய தகவல் வழங்கப்பட்டுள்ளதென்பது தெரிய வருகிறது. இருப்பினும் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள கூட்டுப் பட்டா தொடர்பான தகவல் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட வேண்டுமென்று ஆணையம் கருதி, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

> **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில், இதர அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் 24.10.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள கூட்டுப்**

**பட்டா தொடர்பான ஆவணங்களைத் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 2(j)-ன்படி மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு ஆஜர்படுத்தி, ஆய்வு செய்தபின்னர் தனக்குத் தேவைப்படும் தகவலைக் குறிப்பிட்டுக் கோரும்பட்சத்தில், அதனை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி வழங்கி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 1773/E/2017</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
T.வாடிப்பட்டி,
மதுரை மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு த.இராமலிங்கம்,
த/பெ. இரா.தனுஷ்கோடி,
எண்.2/125, செல்வவிநாயகர் கோவில் தெரு,
சென்ட்ரல் எக்ஸைஸ் காலனி,
அய்யர்பங்களா,
மதுரை மாவட்டம் - 625 014.

Copy to: Judgement File.
20/09/19